**கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம்– 2021ம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் 3/2021 மற்றும் 4/2021ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1888 /2020/சி1)**

**தீர்மான எண். 469**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண். 2**

கடையநல்லூர் நகராட்சி 15வது மத்திய நிதிக்குழு மான்யதிட்டம் 2020–21ன் கீழ் குடிநீர் பணிகளுக்கான மிண்ணனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி அவர்களின் வழியாக தமிழ் சுடர் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் எண்.**A//ADVT//MAY 2021//091** நாள்.13.05.2021ன்படி **TAMIL PUBLICATIONS** என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.12600/யை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4551/2020/இ1)**

**தீர்மான எண். 470**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 11.05.2021ம் தேதி ந.க.எண்.9691/ஜே2/2021ல் ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

இதுவரை இந்நகராட்சி பகுதியில் 2021ம் ஆண்டில் 403 நபர்கள் கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டும், 16 நபர்கள் கொரோனா தொற்றினால் இறந்தும் உள்ளனர். இன்றைய நிலையில் 13 தெருக்கள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டு சுமார் 78 தெருக்கள் மூன்று நபர்களுக்கு கீழ் பாதிக்கபபட்டுள்ள பகுதிகளாகவும் உள்ளது. இந்த பகுதிகளில் கொரோனா தொற்று நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த தொற்று நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு கீழ்க்கண்ட பொருட்கள் அவசர அவசியமாக தேவைப்படுவதால், இந்நகராட்சி தனிஅலுவலர் 24.05.2021 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன்அடிப்படையில் கூட்டுறவு சங்கங்களிடம் விலைப்புள்ளி பட்டியல் பெறப்பட்டது. இதனை ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள இ.இ. 361, சங்கரன்கோவில் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை லிட்., சங்கரன்கோவில் நிறுவனம் மூலம் பொருட்களை வாங்கி வழங்கிடவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் விபரம் | விபரம் | இ.இ. 361, சங்கரன்கோவில் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை லிட்., சங்கரன்கோவில் நிறுவனம் வழங்கிய விலை விபரம் ரூ. (Without GST) | TAMILNADU MULTIPURPOSE INDCO SERVE THIRUCHIRAPALLI வழங்கிய விலை விபரம் ரூ. (Without GST) |
|---|---|---|---|---|
| 1 | மாஸ்க் | 1 No. | 8 | 9 |
| 2 | கிளவுஸ் (சிந்தடிக் + காட்டன்) | 1 No. | 48 | 180 |
| 3 | கிளவுஸ் Rubber (Long size) | 1 No. | 200 | 205 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | லைசால் | 1 லி. | 150 | 166 |
| 5 | குளோரின் திரவம் (5%) | 1 லி. | 20 | 43 |
| 6 | பிளிச்சிங் பவுடர் | 1 கி. | 38.80 | 54 |
| 7 | சுண்ணாம்பு பவுடர் | 1 கி. | 9.70 | 10.60 |
| 8 | சானிடைசர் (100 மிலி குப்பி) | 1 No. | 66 | 59.60 |
| 9 | சோப் ஆயில் (100 மிலி குப்பி) | 1 No. | 158 | 166 |
| 10 | PPE Kit | 1 No. | 285 | 925 |
| 11 | பல்ஸ் ஆக்ஸிமீட்டர் | 1 No. | 1800 | 1800 |
| 12 | தெர்மல் ஸ்கேனர் | 1 No. | 2400 | 2500 |
| 13 | சர்ஜிகல் கிளவுஸ் | 1 No. | 6 | 16 |
| 14 | Face Sheild | 1 No. | 110 | 115 |
| 15 | OT Solution | 500 மிலி. | 325 | 325 |
| 16 | பினாயில் கருப்பு | 1 லி. | 74 | 74 |
| 17 | கோவிட்–19 Yellow Bag (For positive case Garbage Collection purpose) | 1 No. | 15 | 15 |

கொரனோ தொற்று தடுப்பு பணிகள் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சி தனிஅலுவலர் அவர்கள் **26.05.2021** அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தொற்று நோய்தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான பொருட்களை இ.இ.**361** சங்கரன்கோவில் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை லிட் சங்கரன்கோவில் என்ற நிறுவனத்தில் வாங்கி வழங்க விநியோக உத்திரவு வழங்கப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1642/2021/எச்1)**

**தீர்மான எண். 471**

பதிவு செய்து, அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளும் பணிகளில் ஈடுபடும் தூய்மை பணியாளர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் ஆகியோருக்கு கபசுர குடிநீரை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் பொருட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கு தேவைப்படும் கபசுரக்குடிநீர் பவுடர் 500 கிலோ அரசு நிறுவனமான டாம்ப்கால், ஆலந்தூர் மூலம் வாங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இதன் பொருட்டு அவசர அவசியத் தேவையை முன்னிட்டு 26.05.2021 அன்று தனிஅலுவலர் அவர்கள் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்படி டாம்ப்கால் அரசு நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கியதையும் இதன் பொருட்டு செலவுத் தொகை ரூ.**3,87,500**/-ற்கு (ரூபாய் மூன்று இலட்சத்தி எண்பத்தி ஏழாயிரத்தி ஐநூறு மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1642/2021/எச்1)**

**தீர்மான எண். 472**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 5**

கடையநல்லூர் நகராட்சி 2020–21ம் ஆண்டு கணக்கு முடிப்பதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.50000/–த்திற்கும். மேற்படி கணக்கு முடிப்பதற்கு 19.05.2021ம் தேதியன்று விலைப்புள்ளி கேட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.A.ராஜாமணி,<br>Accounts consultant. | ரூ.50000/– |
| 2. | திரு.R.விக்னேஷ் குமார்,<br>Accounts consultant. | ரூ.54000/– |

வரப்பெற்ற மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு.A.ராஜாமணி, என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1621/2021/பி1)**

**தீர்மான எண். 473**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் வார்டு எண்.01 முதல் 33 வார்டுகளிலும் 2020–2021ம் நிதியாண்டுக்கு வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலினை தீவிரபடுத்தி 100% இலக்கினை அடையும் வகையில் ஆட்டோவில் ஒலி பெருக்கி வைத்து விளம்பரம் செய்த வகைக்கு தனி அலுவலரின் 04.02.2021ம் தேதிய முன் அனுமதியின் அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டதன்படி ஆட்டோ (TN76Y 6924) ஒட்டுனா் திரு.M.மகேந்திரன் என்பவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1850/–வீதம் வேலை உத்தரவு வழங்கப்பட்டதன்படி 08.02.2021 முதல் 27.02.2021 வரையிலான காலத்திற்கு (20 தினங்களுக்கு) தொகை ரூ.37000/– வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 651/2021/அ1)**

**தீர்மான எண். 474**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் மினி ஆட்டோ வாகனங்கள் TN76AM7479, TN76AM 7486, TN76 AM 7462 ஆகியவைகளுக்கு டயா் டியூப்கள் தேய்மானம் ஆகிவிட்டதால் வாகனங்கள் இயக்க சிரமாக உள்ளது. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு மேற்காணும் வாகனங்களுக்கு 5 டயா் டியூப்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ,15000/– மதிப்பில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலா் அவா்கள் 12.05.2021 தேதி அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் 13.05.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | விலைப்புள்ளி கொடுத்தவா்கள் விபரம் | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | POPULAR TYRES.<br>173/B-1, MAIN ROAD,<br>NEAR UNION OFFICE,<br>KADAYANALLUR-627751. | ரூ.14500/– |
| 2. | NEW ROYAL AUTOMOBILES.<br>56B, SHENKOCOTTAI ROAD.<br>TENKASI-627 811 | ரூ.15750/– |
| 3. | NATARAJAN MOTOR WORKS,<br>1A, OLD BUS STAND ROAD,<br>TENKASI -627 811. | ரூ.15750/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் ரூ.14,500/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட POPULAR TYRES,173/B-1, MAIN ROAD,NEAR

UNION OFFICE, KADAYANALLUR-627751 என்ற நிறுவனத்தன் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு 5டயர் & டியூப் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்தொகை ரூ.15000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1602/2021/எச்1)**

**தீர்மான எண். 475**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் TN76 B 1197 டிப்பர் வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்ய மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்கள் 03.05.2021 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 18.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | முன் வைப்புத்தொகை செலுத்திய விபரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | மூஸா இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>194, செங்கோட்டை ரோடு,<br>தென்காசி. | முன் வைப்புத் தொகை செலுத்த வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது | ரூ.49,800/– |
| 2. | ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ்,<br>3/514, தென்காசி செங்கோட்டை மெயின் ரோடு,<br>கொட்டாக்குளம். | முன் வைப்புத் தொகை செலுத்த வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது | ரூ.53,200/– |
| 3. | நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ்,<br>1A பழைய பேருந்து நிலைய ரோடு,<br>தென்காசி. | – | ரூ.55, 500/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் ரூ.49,800/–கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட மூஸா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு தென்காசி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வாகனத்தின் **விபரப்படி** பழுதுகளை நீக்கம் செய்ய அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1390/2021/எச்1)**

**தீர்மான எண். 476**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

இந்நகர்மன்ற தீர்மான எண்.312 நாள்.18.09.2017ம் தேதிய தீர்மானத்தில் இந்நகராட்சியில் ஒப்பந்தகாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு.S.M.அருணாசலம் ஒப்பந்தக்காரர் என்பவர் 2012–13 முதல் 2015–2016 வரை உள்ள ஆண்டுகளில் எடுத்து செய்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செல்லப்பட்டமையால் அதனை திரு.S.M.அருணாசலம் ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதிபெறப்பட்டது. அதனடிப்படையில் 5% கூடுதல் வைப்புத் தொகையினை திரும்ப வழங்க நடவடிக்கை மேற்கொண்ட போது டெபாஸிட் கணக்கு முடிக்கப்படாமல் தணிக்கை நிலுவையாக இருந்தமையால் அன்னாருக்கு டெபாஸிட் தொகை வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது அதாவது 2019–20ம் ஆண்டு காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கு முடிக்கப்பட்டு தணிக்கை முடிவு பெற்றமையால் மேற்காணும் தீர்மானத்தின்படி குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத் தொகை ரூ.191382/–யை திரு.S.M.அருணாசலம் ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2203/2017/இ1)**

**தீர்மான எண். 477**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

இந்நகராட்சியில் ஒப்பந்தகாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு.P.ஆறுமுகச்சாமி என்பவர் 2015–16 மற்றும் 2016–2017 வரை எடுத்து செய்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்பு தொகைகளை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ.எண் | வேலையின் விபரம் | 5 % கூடுதல் வைப்பு தொகை |
|---|---|---|
| 1 | வார்டு எண். 15 பரசுராமபுரம் தெற்கு குறுக்குத்தெருக்களில் சிமெண்ட் பேவர்கல் பதிக்கும் பணி. | 10000 |
| 2 | வார்டு எண். 15 பரசுராமபுரம் வடக்குத்தெருவில் சிறுமின்விசை பம்பு அமைக்கும் பணி. | 7500 |
| 3 | வார்டு எண். 8 சிந்தாமதார் பள்ளிவாசல் அருகில் ஆண்கள் கழிப்பிடம் மராமத்து பணிகள் செய்தல். | 10000 |
| 4 | வார்டு எண். 8 சிந்தாமதார் பள்ளிவாசல் அருகில் பெண்கள் கழிப்பிடம் மராமத்து பணிகள் செய்தல். | 15000 |

மேற்காணும் விபரப்படி பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்பு தொகைகள் இதுநாள் வரை ஒப்பந்தக்காரர் திரு. P. ஆறுமுகச்சாமி என்பவருக்கு திரும்ப வழங்கப்படாத நிலையில் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செல்லப்பட்டு விட்டது. எனவே வரிசை எண் 1 முதல் 4 வரையுள்ள பணிகளுக்கான பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்பு தொகைகளை அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1412/2017/இ1)**

**தீர்மான எண். 478**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

இந்நகராட்சியில் ஒப்பந்தகாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு.M.மாடசாமி என்பவர் 2014–15 மற்றும் 2015–2016 வரை எடுத்து செய்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5 % கூடுதல் வைப்பு தொகைகளையும் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ.எண் | வேலையின் விபரம் | 5 % கூடுதல் வைப்பு தொகை |
|---|---|---|
| 1 | தூய்மை இந்தியா திட்டம் SBM 2015–2016ன் கீழ் இந்திரா நகர் புதுகாலணி பகுதியில் சமுதாய நலக்கூடம் கட்டும் பணி. | 32500 |
| 2 | தூய்மை இந்தியா திட்டம் SBM 2015–2016ன் கீழ் வார்டு எண்.22 தென்காசி ரோடு நுகர்பொருள் வாணிப கழகம் அருகில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி. | 32500 |
| 3 | வார்டு எண். 9 இல்லத்தார் தெற்கு தெரு மேற்கு பகுதியில் சிறுபாலம் கட்டும் பணி. | 5000 |

மேற்காணும் விபரப்படி பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்பு தொகைகள் இதுநாள் வரை ஒப்பந்தக்காரர் திரு.M.மாடசாமி என்பவருக்கு திரும்ப வழங்கப்படாத நிலையில் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செல்லப்பட்டு விட்டது. எனவே வரிசை எண் 1 முதல் 3 வரையுள்ள பணிகளுக்கான பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்பு தொகைகளை அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 707/2017/இ1)**

**தீர்மான எண். 479**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

இந்நகராட்சியில் ஒப்பந்தகாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு.G.முருகன் என்பவர் 2016–2017 வரை எடுத்து செய்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5 % கூடுதல் வைப்பு தொகைகளையும் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ.எண் | வேலையின் விபரம் | 5 % கூடுதல் வைப்பு தொகை |
|---|---|---|
| 1 | வார்டு 25 பஜனைமடம் தென்வடல் தெரு பண்பொழி ரோட்டில் சிமிண்ட் பேவர்கல் அமைத்தல் பணி | 15000 |
| 2 | வார்டு 25 காளியம்மன் கோவில் வடக்கு தெருவில் சிமிண்ட் பேவர்கல் அமைத்தல் பணி | 25000 |
| 3 | வார்டு 15 நைனாமுகம்மது பள்ளிவாசல் தென்வடல் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் தாருஸ்லாம்பள்ளி அருகில் எதிர்புரம் பழுதடைந்த வடிகால் சரிசெய்யும் பணி | 20000 |

மேற்காணும் விபரப்படி பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்பு தொகைகள் இதுநாள் வரை ஒப்பந்தக்காரர் திரு.G.முருகன் என்பவருக்கு திரும்ப வழங்கப்படாத நிலையில் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செல்லப்பட்டு விட்டது. எனவே வரிசை எண் 1 முதல் 3 வரையுள்ள பணிகளுக்கான பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்பு தொகைகளை அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2523/2017/இ1)**

**தீர்மான எண். 480**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

இந்நகராட்சியில் ஒப்பந்தகாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு. P.M.அசன் முகம்மது என்பவர் 2016–2017 வரை எடுத்து செய்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5 % கூடுதல் வைப்பு தொகைகளையும் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ.எண் | வேலையின் விபரம் | 5 % கூடுதல் வைப்பு தொகை |
|---|---|---|
| 1 | வார்டு 9 இல்லத்தார் தெற்கு தெருவில் சிமிண்ட் பேவர்கல் அமைத்தல் பணி | 30000 |
| 2 | வார்டு 12 கல்வத்நாயகம் தெருவில் சிமிண்ட் பேவர்கல் அமைத்தல் பணி | 25000 |

மேற்காணும் விபரப்படி பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்பு தொகைகள் இதுநாள் வரை ஒப்பந்தக்காரர் திரு. P.M.அசன் முகம்மது என்பவருக்கு திரும்ப வழங்கப்படாத நிலையில் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செல்லப்பட்டு விட்டது. எனவே வரிசை எண் 1 முதல் 2 வரையுள்ள பணிகளுக்கான பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்பு தொகைகளை அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2524/2017/இ1)**

**தீர்மான எண். 481**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

இந்நகர்மன்ற தீர்மான எண்.224 நாள்.21.06.2017ம் தேதிய தீர்மானத்தில் இந்நகராட்சியில் ஒப்பந்தகாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வரும் திரு.R.முருகன் ஒப்பந்தக்காரர் என்பவர் 2011–12 மற்றும் 2012–2013 ஆண்டுகளில் எடுத்து செய்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செல்லப்பட்டமையால் அதனை திரு.R.முருகன் ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதிபெறப்பட்டது. அதனடிப்படையில் 5% கூடுதல் வைப்புத் தொகையினை திரும்ப வழங்க நடவடிக்கை மேற்கொண்ட போது டெபாசிட் கணக்கு முடிக்கப்படாமல் தணிக்கை நிலுவையாக இருந்தமையால் அன்னாருக்கு டெபாசிட் தொகை வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது

அதாவது 2019–20ம் ஆண்டு காலம் கடந்த வைப்புத்தொகை கணக்கு முடிக்கப்பட்டு தணிக்கை முடிவு பெற்றமையால் மேற்காணும் தீர்மானத்தின்படி குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத் தொகை ரூ,39928/–யை திரு.R.முருகன் ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 624/2017/இ1)**

**தீர்மான எண். 482**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 15**

கடையநல்லூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் நில அளவை சர்வேயர்க்கான தனி அலுவலக அறை வசதிகள் ஏதும் அமைக்கப்படவில்லை. நகராட்சி சுகாதார அலுவலக பிரிவு நகராட்சி சுகாதார அலுவலர்களுக்கான போதுமான அலுவலக அறை வசதிகள் ஏதும் இல்லை. ஆகவே மேற்காணும் அலுவலர்களுக்கான அறை வசதிகள் அமைத்துக் கொடுக்கவும் மற்றும் நகராட்சி வளாகம் வடபுறம் அம்மா உணவகம் தென்புறம் பகுதியில் நான்கு சக்கர மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.325000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1610/2021/இ1)**

**தீர்மான எண். 483**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 16**

கடையநல்லூர் நகராட்சி – குடிநீர் விநியோக பணிகளுக்கு பணியாளர்கள் ஒப்பந்தஅடிப்படையில் (Out sourcing) ஒப்பந்ததாரர் மூலம் பணிலமர்த்தும் பணியினை ரூ.986000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண். 460 நாள்.12.05.2021ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 28.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு.APMA.காஜா,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 4.65%<br>குறைவு | ரூ.9860/–க்கான TMB Bank KDNR D.D.No.423739. நாள். 24.05.2021ன் படி சமர்பித்துள்ளார். |
| திருமதி. P.ஆயிசா,<br>ஒப்பந்தக்காரர்,<br>பேட்டை, திருநெல்வேலி. | 7.44%<br>அதிகம் | ரூ.9860/–க்கான TMB Bank KDNR D.D.No.423740. நாள். 24.05.2021ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு.P.சாகுல்கமீது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 15.81%<br>குறைவு | ரூ.9900/–க்கான KVB Bank KDNR D.D.No.336911. நாள். 27.05.2021ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 15.81% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.P.சாகுல்கமீது, ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1590/2021/இ1)**

**தீர்மான எண். 484**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 17**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.19396/2017/P3 நாள்.23.01.2019ன் தெரிவித்துள்ளபடியும், கடையநல்லூர் நகராட்சி – திடக்கழிவு மேலாண்மை பணிகள் பசுமை நுண்ணுயிர் உரக்குடில்களுக்கு (MCC) பயன்படுத்தப்படும் 50 எண்ணம் BOV வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணியினை ரூ.9,98,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.461 நாள்.12.05.2021ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 28.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| M/s., Sharp Systems,<br>106A, Beem Sait Colony, Sai Nagar,<br>Podhanur, Coimbatore. | 0.25%<br>குறைவு | முன்வைப்பு தொகை செலுத்த வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. |
| M/s., Selvaram Enterprises,<br>10, Mariamman Kovil Street,<br>Srinivasa Nagar<br>Tiruppur. | 0.25%<br>அதிகம் | முன்வைப்பு தொகை செலுத்த வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.25%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள Sharp Systems, 106A, Beem Sait **Colony, Sai Nagar,Podhanur, Coimbatore** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 477/2021/இ1)**

**தீர்மான எண். 485**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 18**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண். 3 கிருஷ்ணாபுரம் பூங்கா அங்கன்வாடிமையம் தரை(Floor), கழிவறை மற்றும் குடிநீர் வசதிகள் செய்யும் பணியினை ரூ.1,90,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.462 நாள்.12.05.2021 ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 28.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. S.முருகையா,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.11%<br>குறைவு | ரூ.1900/–செல்லாண் எண். 141/001/2/21–22/0000934 நாள். 28.05.2021 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. K.S.அப்துல் மாலிக்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 4.10%<br>அதிகம் | ரூ.1900/–செல்லாண் எண். 141/001/2/21–22/0000935 நாள். 28.05.2021 ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.01%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. S.முருகையா ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1453/2021/இ1)**

**தீர்மான எண். 486**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 19**

கடையநல்லூர் நகராட்சி – புதிய பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்யும் பணியினை ரூ.5,30,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண்.466 நாள்.12.05.2021 ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 28.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. V.வெள்ளத்துரை,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.04%<br>குறைவு | ரூ.5300/–க்கான செல்லாண் எண். 141/001/2/21–22/0000933 நாள். 28.05.2021 ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. C.வேல்துரை,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 1.66%<br>அதிகம் | ரூ.5300/–க்கான IOB Bank D.D.No.135403 நாள். 28.05.2021 ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. V.வெள்ளத்துரை ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.4025 /2021/இ1)**

**தீர்மான எண். 487**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 20**

பேறறிஞர் அண்ணா தினசரி சந்தையின் மூன்றாண்டு உரிமம் 31.03.2021 உடன் முடிவடைவதால் இவ்வினத்திற்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகள் குத்தகை உரிமத்திற்கு இவ்வலுவலகம் மூலமாக 02.02.2021, 12.02.2021 மற்றும் 23.02.2021 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. மேற்கண்ட மூன்று ஏலங்களிலும் யாரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. எனவே மேற்கண்ட குத்தகை இனத்திற்கு நான்காவது முறையாக 05.03.2021 அன்று மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. இந்நிலையில் 26.02.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுல் படுத்தப்பட்டதால் 05.03.2021 அன்று நடைபெற இருந்த பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ரத்து செய்யப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டதால் ஏலம் போகாத குத்தகை இனங்களுக்கு ஏல நடவடிக்கை எடுக்க இயலாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.5301/2021/ஆர்3 நாள்.16.03.2021ம் தேதிய சுற்றறிக்கையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ள நிலையில், ஏலம் போகாத குத்தகை இனங்களுக்கு ஏல நடவடிக்கை எடுக்க இயலாத நிலையில் உள்ளதால் ஏலம் போகாத குத்தகை இனங்களுக்கு தற்போது நடத்திவரும் குத்தகைதாரர்களுக்கு கடிதம் அனுப்பி உரிய சம்மதக்கடிதம் பெற்று முந்தைய குத்தகை தொகையின் அடிப்படையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ள காலம் வரையிலும் உரிய அனுமதி வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது தினசரி சந்தையினை தற்போது குத்தகைக்கு ஏற்று நடத்திவரும் திரு.கார்த்தீஸ்வரன் S/o.ராமசாமி 16பி செவல்விளைத்தெரு, முத்துக்கிருஷ்ணாபுரம் என்பவருக்கு உரிய அறிவிப்பு கடிதம் அனுப்பி அன்னாரிடமிருந்து சம்மதக்கடிதம் பெறப்பட்டது. அன்னாரின் சம்மதத்தின் பேரில் மேற்கண்ட குத்தகை இனத்திற்கு 2020–21ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ.1005039/–ல் ஏப்ரல், மே மாதத்திற்கான குத்தகை ரூ.167507/–ல் அன்னார் இவ்வலுவலக ரசீது எண்.10845 நாள்.31.03.2021ன்படி ரூ.50,000/– செலுத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து தனி அலுவலர் அவர்கள் 31.03.2021 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் பேரில் திரு.கார்த்தீஸ்வரன் என்பவருக்கு 01.04.2021 முதல் 31.05.2021 வரைக்கான குத்தகை உரிமம் வழங்கப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவி வருவதால் அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு எண்.227 நாள்.24.04.2021ன்படி பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவித்ததோடு அடுத்து வருகின்ற ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தளர்வில்லா முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு அமுலில் இருந்து வருகிறது. முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டும் நோயின் தாக்கம் குறையாததால் மேலும் நோயினை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அரசின் செய்தி வெளியீடு எண்.08 நாள்.08.05.2021ன்படி தமிழ்நாட்டில் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்த தவிர்க்க இயலாத காரணங்களினால் 10.05.2021 முதல் 24.05.2021 வரை தளர்வுகளுடன் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இச்செய்தி குறிப்பில் காய்கறிகடைகள் மற்றும் மளிகை கடைகள் நண்பகல் 12 மணி வரையிலும் மட்டுமே செயல்பட அனுமதி வழங்கப்பட்டதால் பேரறிஞர் அண்ணா நகராட்சி தினசரி சந்தையில் பெரும்பாலான காய்கறிகடைகள் திறக்கப்படவில்லை. முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டதால் நோய்த் தொற்று கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக தென்காசி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 09.05.2021ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் வழங்கியஅறிவுரையின்படி பொது மக்கள் அதிகமாக கூடுகின்ற தினசரி சந்தையின் வேறு இடத்திற்கு மாற்றியமைத்து கொரோனா பரவலை தடுக்க அரசுக்கு ஒத்துழைப்பு தருமாறு தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட ஆய்வுக்கூட்டத்தில் 10.05.2021 முதல் பொதுப் பேருந்து சேவை நிறுத்தப்பட்டதால் நகராட்சி பேருந்து நிலையத்திற்கு தினசரி சந்தையினை மாற்றியமைக்கவும் அறிவுருத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 09.05.2021 அன்று ஆணையாளர் தலைமையில் தினசரி சந்தையினை மாற்றியமைப்பது தொடர்பான வியாபாரிகளின் கூட்டம் நடைபெற்றது. இதில் தினசரி சந்தையினை நகராட்சி பேருந்து நிலையத்திற்கு உடனடியாக மாற்றியமைத்து அரசுக்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இதில் ஒருமித்த கருத்துக்கள் ஏதும் ஏற்படாததால் 10.05.2021 அன்று கோட்டாட்சியர் அவர்கள் தலைமையில் வியாபாரிகளை மீண்டும் அழைத்து பேசப்பட்டதில் 12.05.2021 அன்று பேருந்து நிலையத்திற்கு மொத்த வியாபாரக் கடைகளை மாற்றியமைக்க விருப்பம் தெரிவிக்கப்பட்டது. அதன்படி 12.05.2021 முதல் நகராட்சி பேருந்து நிலையத்தில் தினசரி சந்தை செயல்பட்டு வருகிறது. முழு ஊரடங்கினை காரணம்காட்டி குத்தகைதாரர்க்கு யாரும் குத்தகை தொகையினை கொடுக்கவில்லை எனவும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அரசால் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அந்நாட்களுக்கு உரிய இழப்பீடும் மேற்கண்ட முழுஊரடங்கு நாட்களுக்குரிய குத்தகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கவும் சம்மந்தப்பட்ட குத்தகைதாரரால் 10.05.2021ம் தேதிய மனுவில் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் வருவாய் பேரிடர் மேலாண்மை DM(IV) துறை அரசாணை(MS) எண்.386 நாள்.22.05.2021ன்படி 24.05.2021 முதல் 31.05.2021 வரை தளர்வில்லா முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் 24.05.2021 முதல் தினசரி சந்தை முற்றிலும் அடைக்கப்பட்டது.

மேலும் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட ஞாயிற்றுக்கிழமையான 25.04.2021, 02.05.2021, 09.05.2021, 16.05.2021 மற்றும் 23.05.2021 ஆகிய 5 ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் தளர்வில்லா முழு ஊரடங்கு காலங்களான 24.05.2021 முதல் 31.05.2021 வரை ஆகிய 8நாட்கள் ஆக மொத்தம் 13 நாட்களுக்கு தொகை ரூ(2746x13)=35698/ஐ தான் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகைக்கு விலக்களிக்க கேட்டுள்ளார். மேலும் திரு.கார்த்தீஸ்வரன் என்பவர் ஏப்ரல்–2021 மற்றும் மே–2021க்கான குத்தகை தொகை ரூ.167507/–ல் அன்னார் செலுத்தப்பட்ட தொகை ரூ.124000/– போக மேற்கண்ட கொரோனா காலங்களில் செலுத்த வேண்டிய தொகை ரூ.35698/– போக மீதம் உள்ள தொகை ரூ.7809/–ஐ திரு.கார்த்தீஸ்வரன் என்பவர் பெயரில் ஏற்கனவே வாரச்சந்தை குத்தகைக்கு 2018–19ம் ஆண்டில் செலுத்தப்பட்ட காலங்கடந்த வைப்புத்தொகையிலிருந்து ஈடுசெய்யவும் கொரோனா காலங்களுக்குரிய தொகை ரூ.35698/–ஐ குத்தகை தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக மேலும் 01.06.2021 மேற்கண்ட குத்தகை இனம் ஏலம் விடுப்படும் வரை அலுவலகம் மூலம் வசூல் செய்யவும் அங்ககாரத்திற்காக.

**(ந.க.எண். 4959/2020/அ3)**

**தீர்மான எண். 488**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.183 நாள்.05.09.2019 மற்றும் நகர்மன்ற தீர்மானம் எண்.258 நாள்.31.10.2019ன்படி இந்நகராட்சி வார்டு 29, சந்தை தெருவில் அம்மா உணவகம் வடக்கு பக்கம்

புதியதாக கட்டப்பட்டுள்ள கடை எண்.1 முதல் 10வரை உள்ள இனங்களுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு கீழ்க்கண்ட உயர்ந்த பட்ச ஏலதாரர்களுக்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.2890/2019/அ3 நாள்.01.11.2019ன்படி உரிம உத்தரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் இளநிலை பொறியாளர் அவர்களின் 08.09.2020ம் தேதிய அறிக்கையில் மேற்கண்ட கடைகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு வருவாய் ஆய்வாளரிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செயற்குறிப்பு எண்.182 நாள்.30.08.2020ல் பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் தளர்வுகளுடன் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையாக ஊரடங்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட ஊரடங்கு தளர்வு பெற்ற பின்னர் மேற்கண்ட கடைகளுக்குரிய சம்மந்தப்பட்ட ஏலதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம் என அப்போதைய ஆணையரவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் இவ்வலுவலக அறிவிப்பு கடித ந.க.எண்.2890/2019/அ3 நாள்.05.02.2021ம் தேதிய அறிவிப்பு கடித வாயிலாக மேற்கண்ட கடைகளுக்கு ஒருவருட கூடுதல் வைப்புத்தொகையினை செலுத்தக்கேட்டு சம்மந்தப்பட்ட ஏலதாரர்களை கேட்டுக் கொள்ளப்பட்டது. இதில் ஏற்கனவே கீழ்க்கண்டவாறு கூடுதல் வைப்புத்தொகை செலுத்தியவர்கள் தவிர வேறு எவரும் கூடுதல் வைப்புத்தொகை செலுத்தவில்லை.

| கடை எண். | பெயர் | ரசீது எண்/ நாள் | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி.யாஸ்மின் மரியம் | 05.01.2021<br>8300 | ரூ.55200/ |
| 3. | திரு.மக்தூம் | 06.01.2021<br>8337 | ரூ.53400/– |
| 9. | திருமதி. ஜவஹர் நிஷா | 29.01.2021<br>8880 | ரூ.45000/– |
| 5. | திருமதி.ரைஹான் பீவி | 01.02.2021<br>8949 | ரூ.35000/– |

மேற்கண்ட நபர்கள் தவிர மற்ற 6 கடைக்காரர்கள் கூடுதல் வைப்புத்தொகை ஏதும் செலுத்தாததால் இவ்வலுவலக இறுதி 19.03.2021ம் தேதிய இறுதி அறிவிப்பு கடித மூலமாக ஒருவருட வாடகை கூடுதல் வைப்புத்தொகையினை செலுத்த கேட்டுக்கொள்ளப்பட்டது.

**இதில் கீழ்க்கண்ட விபரப்படி மேற்கண்ட கடைக்காரர்கள் தொகை செலுத்தியுள்ளர்கள்**

| கடை எண். | பெயர் | ரசீது எண்/ நாள் | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.குலாம் மைதீன் | 10.02.2021<br>9275 | ரூ.44500/ |
| 10. | திரு.A.அகமது | 24.03.2021<br>10700 | ரூ.45000/– |
| 4. | திரு.அபுபக்கர் சித்திக் | 24.03.2021<br>10699 | ரூ.45000/– |
| 2. | திரு.அம்ஜக்கான் | 24.03.2021<br>10702 | ரூ.45000/– |
| 7. | திரு.அபுதாஹிர் | 23.03.2021<br>10679 | ரூ.36000/– |
| 8. | திரு.செய்யது முகம்மது | 26.03.2021<br>10781 | ரூ.45000/– |

மேற்கண்ட பத்து கடைகளுக்கும் ஒருவருட வாடகை கூடுதல் வைப்புத்தொகை செலுத்தப்பட்டதால் இக்கடைகளுக்கு சாவியினை ஒப்படைக்க வேண்டிய நிலையில் தமிழ்நாடு சட்ட மன்றபொதுத்தேர்தல் நடத்தைவிதிகள் 26.02.2021 முதல் அமுலில் இருந்ததால் மேற்கண்ட கடைகளின் சாவியினை ஒப்படைக்க இயலாத நிலை ஏற்பட்டது. மேலும் 03.05.2021 உடன் தேர்தல் நடத்தை விதிகள் தளர்வு பெற்றதால் 04.05.2021ம் தேதிய இவ்வலுவலக அறிவிப்பு கடிதத்தின் வாயிலாக உரிய ஒப்பந்தப்

பத்திரம் சமர்ப்பிக்க மேற்கண்ட கடைக்காரர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. ஒப்பந்த பத்திரம் சமர்ப்பித்த நிலையில் நாடெங்கிலும் கொரோனா தொற்று நோய் வேகமாக பரவிவருவதால் நோய் தொற்றினை தடுக்கும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது செய்தி வெளியீடு எண்.08 நாள்.08.05.2021 மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது செய்தி குறிப்பு எண்.06 நாள்.22.05.2021ன்படி 31.05.2021 வரை தளர்வில்லா முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சி பகுதியில் கடைகள் திறக்கப்படவில்லை. கடைகள் திறக்க தடை விதிக்கப்பட்டதால் மேற்கண்ட 10 கடைகளுக்குரிய சாவியினை ஒப்படைக்கவில்லை. எனவே முழு ஊரடங்கு தளர்வு பெற்ற பின்னர் 01.06.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு கீழ்க்கண்ட கடைகளுக்கு குத்தகை ஒப்படைப்பு உரிமம் வழுங்கலாம்.

| கடை எண் | பெயர் / முகவரி | மாத வாடகை ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி.யாஸ்மின் மரியம்,<br>W/o,ரெசவு முகம்மது,<br>33/16, அழகு மகுதணன் கிழமேல் தெரு,<br>பேட்டை, கடையநல்லூர். | ரூ.4600/– |
| 2 | திரு.அம்ஜத்கான்,<br>S/o இப்ராஹ்ம் மைதீன்<br>34/23, சந்தைதெரு,<br>பேட்டை, கடையநல்லூர். | ரூ.4500/– |
| 3 | திரு.மக்தூம்,<br>S/o அப்துல் ரஹ்மான்<br>34/23, சந்தைதெரு,<br>பேட்டை, கடையநல்லூர். | ரூ.4450/– |
| 4 | திரு.அபுபக்கர் சித்திக்<br>102/50G, மலம்பாட்டை தெரு,<br>பேட்டை, கடையநல்லூர். | ரூ.4500/– |
| 5 | திருமதி.ரைஹான் பீவி,<br>78/185 நத்தஹர் பள்ளிவாசல் தெரு,<br>பேட்டை, கடையநல்லூர். | ரூ.3500/– |
| 6 | திரு.குலாம் மைதீன்,<br>89D, நத்தஹர் பள்ளிவாசல் தெரு,<br>பேட்டை, கடையநல்லூர். | ரூ.4450/– |
| 7 | திரு.H.அபுதாஹீர்<br>S/o. காஜா மைதீன்,<br>164, நத்தஹர் பள்ளிவாசல் தெரு,<br>பேட்டை, கடையநல்லூர். | ரூ.4550/– |
| 8. | திரு. செய்யது முகம்மது,<br>S/o. முகம்மது முஸ்தபா,<br>164, நத்தஹர் பள்ளிவாசல் தெரு,<br>பேட்டை, கடையநல்லூர். | ரூ.4500/– |
| 9. | திரு.ஜவஹர் நிஷா,<br>137/1 புளியமுக்கு தெரு,<br>பேட்டை, கடையநல்லூர். | ரூ.4500/– |
| 10. | திரு. அ. அஹமது,<br>S/o. அப்துல் காதர்,<br>1F15A2, அல்லி மூப்பன் கிழக்கு தெரு,<br>கடையநல்லூர். | ரூ.4500/– |

எனவே மேற்கண்ட கடையின் உரிமதாரர்களுக்கு உரிய நிபந்தனைகளுடன் குத்தகை ஒப்படைப்பு உரிமம் வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 2890/2019/அ3)**

**தீர்மான எண். 489**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 22**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.22 மங்கம்மாள் சாலை கிழக்கு பகுதி மற்றும் மேல் பகுதி இந்திரா நகர் தெருக்களுக்கு வாறுகால் வசதிகள் இல்லை. இதனால் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் வெளியேறும் கழிவு நீரினால் தொற்று நோய்கள் பரவ வாய்புள்ளது. மேலும் மழையினால் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் அப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டும் மேற்காணும் பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.997000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1603/2021/இ1)**

**தீர்மான எண். 490**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.23**

கடையநல்லூர் நகராட்சி பகுதியில் வார்டு எண்.22 இந்திரா நகர் அன்னை பிரைமரி பள்ளி தெருக்கள் மற்றும் குறுக்கு தெருக்களுக்கு வாறுகால் வசதிகள் முறையாக இல்லை. இதனால் அத்தெருக்களிலுள்ள வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரினால் தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. மேலும் மழை காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் வீடுகளில் மழைநீர் செல்லும் அபாயம் உள்ளது. ஆகவே அவசர அவசியம் கருதி மேற்காணும் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.985000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1206/2021/இ1)**

**தீர்மான எண். 491**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 24**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.30 பேட்டை ரைஸ்மில் தெருவையும் , காதர் மைதீன் பள்ளிவாசல் தெருவையும் இணைக்கும் சந்துப் பகுதியில் நகராட்சி குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கப்பட்டதால் குண்டும் குழியுமாக பொதுமக்கள் நடக்க ஆபத்தான நிலையில் உள்ளது. மேலும் மழைகாலங்களில் தண்ணீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதாரக் கோடாக உள்ளது. எனவே அப்பகுதி பொதுமக்கள் மற்றும் பேட்டை ஜமாத்தார்கள் கோரிக்கையின் அடிப்படையிலும் அவசர அவசியம் கருதி மேற்காணும் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.480000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1606 /2021/இ1)**

**தீர்மான எண். 492**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 25**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.29 பேட்டை நடுத்தெருவில் குடிநீர் விநியோகக் குழாய் மற்றும் வீட்டு இணைப்புகள் பதிக்கப்பட்டதால் எற்பட்ட பள்ளங்கள் மற்றும் அப்பகுதியிலுள்ள மழைநீர் வடிகால் சுவர்கள் தாழ்ந்து மழைநீர் வடியாமல் தேங்கி சுகாதாரக் கேடாக உள்ளது. எனவே அப்பகுதி பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி

மேற்காணும் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்து பேவர்கல் சாலை அமைக்கவும் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.900000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1607 /2021/இ1)**

**தீர்மான எண். 493**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 26**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.13 இக்பால் நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள பொதுசுகாதாரப்பிரிவு அலுவலகம் (Ward Office) முன்பகுதியில் பாதுகாப்புச் சுவர் இல்லாமல் கால்நடைகள் மற்றும் விஷசந்துக்கள் புகும் வண்ணம் உள்ளது. எனவே மேற்காணும் கட்டிடம் முன்பகுதியில் பாதுகாப்புச் சுவர் மற்றும் பேவர் பிளாக் நடைபாதை அமைக்க வேண்டியுள்ளதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி மேற்காணும் பணிகளை ரூ.480000/— மதிப்பிட்டில் மேற்க்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1608 /2021/இ1)**

**தீர்மான எண். 494**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 27**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27 கரிய மாணிக்கப் பெருமாள் கோவில் தெரு கீழ் பகுதி, வார்டு எண்.32 ரகுமானியாபுரம் தென்வடல் தெரு மற்றும் வார்டு எண்.33 கருப்பன் கோவில் முன்புறம் உள்ள குடிநீர் வால்வு தொட்டிகள் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. மேற்படி வால்வு தொட்டிகள் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு மேற்காணும் பகுதியில் புதிதாக வால்வு தொட்டி அமைத்து இரும்பு மூடிகள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1609 /2021/இ1)**

**தீர்மான எண். 495**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 28**

இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கம் கடை எண்.2க்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கான குத்தகை உரிமத்திற்கு இவ்வலுவலக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 02.02.2021ம் தேதிய அறிவிப்பின்படி திரு.A.மக்தூம், 16G சந்தைத் தெரு, பேட்டை, கடையநல்லூர் என்பவர் மேற்கண்ட பொது ஏலத்தின் கலந்து கொண்டு மாத வாடகையாக ரூ.7000/—க்கு உச்ச ஏலக் கேள்வி கேட்டுள்ளார். அன்னாரின் உச்ச ஏலக் கேள்வி மீது இந்நகர்மன்ற தீர்மான எண்.393 நாள்.11.02.2021ல் 01.04.2021 முதல் 31.03.2024வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்க இசைவு வழங்கியுள்ளது. மேலும் 2021—24ம் ஆண்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை 16(இ)ன்படி ஏலம் உறுதி செய்த பின்னர் ஏலம் கேட்கப்பட்ட தொகையில் ஒருவருட வாடகை கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். இதனைத் தொடர்ந்து இவ்வலுவலக அறிவிப்பு கடித ந.க.எண்.4959/2020/அ3 நாள்.12.02.2021 மற்றும் இறுதி அறிவிப்பு கடித நாள்.11.03.2021ன்படி மேற்கண்ட

ஏலதாரருக்கு ஒருவருட வாடகை ரூ.84000/—ஐ செலுத்த கோரப்பட்டது. அன்னார் இரண்டு அறிவிப்புக் கடிதங்களுக்கும் பெற்றுக்கொண்டு எவ்வித பதிலும் சமர்ப்பிக்கவில்லை. இந்நிலையில் திரு.மக்தூம் என்பவர் தமது 29.03,2021ம் தேதிய மனுவில் தனக்கு உடல் நிலை சரியில்லாமல் உள்ளதால் தொடர்ந்து வேலை செய்ய முடியவில்லை எனவும்(மருத்துவ சான்று இணைக்கப்பட்டுள்ளது) மேற்கண்ட கடையின் உரிமத்தினை ரத்து செய்து அன்னார் மேற்கண்ட கடைக்காக செலுத்தியுள்ள ஏல டெபாசிட் தொகை ரூ.100000/—ஐ (ரசீது எண்.141/001/20—21/10835 நாள்.30.03.2021) திரும்ப வழங்க கோரியுள்ளார். அன்னாரின் மனு பரிசீலிக்கப்பட்டது. கொரோனா தொற்று நோய் வேகமாக பரவி வருவதால் தளர்வில்லா முழு ஊரடங்கு அரசால் அமுல் படுத்தப்பட்டுள்ளதால் மேற்கண்ட கடையினை அன்னாரிடம் ஒப்படைப்பு செய்யவில்லை. அன்னாரின் உடல் நிலையினை கருத்திற்கொண்டு தீர்மானம் எண்.393 நாள்.11.02.2021ல் மேற்கண்ட கடைக்கு திரு.மக்தூம் என்பவர் பெயரில் வழங்கப்பட்ட அங்கீகாரத்தினை ரத்து செய்து அன்னார் இக்கடைக்கான பொது ஏலத்தில் கலந்து கொள்ள செலுத்தியுள்ள ஏல டெபாசிட் தொகை ரூ.100000/—ல் 6 மாத வாடகைத் தொகை ரூ.42000/—ஐ பிடித்தம் செய்து கொண்டு மீதத் தொகைரூ.58000/— அன்னாருக்கு தணிக்கை முடிவு பொறுத்து திரும்ப வழங்கவும் 01.06.2021 முதல் மூன்றாண்டுகளுக்கு மேற்கண்ட கடையினை பொது ஏலம் விடவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 4959 /2020/அ3)**

**தீர்மான எண். 496**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 29**

கடையநல்லூர் நகராட்சியில் மின்கம்பி உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.மு.மகேஷ் என்பவருக்கு முதல்வர், திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி அவர்களது ந.க.எண்.20836/ம.குழு/2019 நாள்.12.12.2019 கடிதத்துடன் இணைத்துவரப்பெற்ற மருத்துவச்சான்றிதழில் 60 சதவீதம் ஊனத்தின்தன்மை குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாணை எண்.307 நிதி (ஊதியப்பிரிவு) துறை நாள்.13.10.2017ன்படி மாற்றுத்திறனாளி பணியாளர்களுக்கு போக்குவரத்துப்படியாக ரூ.2000/— வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. எனவே திரு.மு.மகேஷ், மின்கம்பி உதவியாளருக்கு மேற்படி மருத்துவச்சான்றிதழ் மற்றும் அரசாணைப்படி ரூ.2000/— வழங்க அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**(ந.கஎண்.1435/2021/சி1)**

**தீர்மான எண். 497**

அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்)S.ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**